கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்ட மன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் முருகன்குடி ஊராட்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்கள் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமை துவக்கி வைத்து பொது மக்களுக்கு அரசு பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு

5 - 6 வது மண்டலத்தில் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்! மேயர் பிரியா பங்கேற்பு!

சென்னை, அக்.24–

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (22.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க நகர் 6வது மண்டல அலுவலகம் மற்றும் அதனைத் தொடர்ந்து இராயபுரம் 5வது மண்டல அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து உயர் அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாநகராட்சி 5வது மண்டல அலுவலகத்தில் மேயர் திருமதி.ஆர். பிரியா செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னை மாநகராட்சி சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இந்த ஆண்டும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து இன்று (22.10.2025) காலை மண்டலம் 6–க்குட்பட்ட திரு.வி.க. நகர் மற்றும் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட மாமன்ற உறுப்பினர்களும், அந்த பகுதியின் வட்டார துணை ஆணையர் அவர்களும், தொகுதி பொறுப்பாளர் கணேசன் ஐ.ஏ.எஸ். அவர்களும் ஒருங்கிணைந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

மண்டலம் 6–க்குட் பட்ட தேவைகளின் அடிப்படையில், வருகின்ற வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரி க்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலோசனை நடைபெற்றது. மாமன்ற உறுப்பினர்கள் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து அதற்கேற்ப கூட்டம் நிறை வேற்றப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தற்பொழுது மண்டலம் 5–க்குட்பட்ட இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் அவர்களும், மதிப்பிற்குரிய மண்டலக்குழு தலைவர் ஸ்ரீராமுலு அவர்களும், வட்டார துணை ஆணையர் ரவி சார் அவர்களும் உட்பட பிற துறை சார்ந்த அதிகாரிகளும் இந்த கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மண்டலம் 5–க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டதுடன், இன்று மண்டலம் 5–க்கு மட்டும் ஒன்பது நிவாரண மையங்கள் (Relief Centres) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மண்டலம் 5 என்பது பொதுமக்கள் அதிகம் வசிக்கும் பகுதி என்பதால், குறிப்பாக சௌகார்பேட்டை பகுதியில் அதிக மக்கள் வசிக்கின்ற சூழலில், இந்த 9 நிவாரண மையங்கள் (Relief Centres) தயார் நிலையில் உள்ளன.

அதேபோல், தற்போது மூன்று பகுதிகளில் சமையல் கூடங்கள் (Cooking Centres) தயார் நிலையில் உள்ளன. வரவிருக்கும் நாட்களில் மழை அதிகரிக்கும் சூழல் இருந்தால், தேவையின் அடிப்படையில் வார்டு வாரியாக சமையல் கூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என இந்த கூட்டத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் 5–க்குட்பட்ட 15 பகுதிகளில் 100 HP திறன் கொண்ட பம்பிங் மோட்டார்கள் முன்னெச்சரிக்கையாக பொருத்தப்பட்டுள்ளன. கடந்த மாதமே பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக லோ லைன் ஏரியாக்கள் அடையாளம் காணப்பட்டு, மாநகராட்சி முழுவதும் கிட்டத்தட்ட 150 பகுதிகளில் இந்த 100 ஹெச்பி திறன் கொண்ட மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டும் இதேபோல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த ஆண்டும் அந்த அனுபவத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மண்டலம் 5–க்குட்பட்ட பகுதிகளில் Desilting பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள் ளன. இம் மண்டலத்தில் மட்டும் ஐந்து சுரங்கப் பாதைகள் உள்ளன. அவை முற்றிலுமாக சீரமைக்கப் பட்டுள்ளன. ரிப்பன் வளாகத்தில் உள்ள ICCC (Integrated Command & Control Centre) உட்பட்ட சிசிடிவி கேமராக்களின் மூலம் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுரங்கப் பாதைகளில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டால் உடனடியாக ICCC (Integrated Command & Control Centre) கூழல் ஏற்படுத்தப்பட்டு, தண்ணீர் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வகையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சுகாதாரத் துறை சார்பாகவும், மழைக் காலம் முடிந்தவுடன் தேவையான பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேவையான மருந்துகள் மாநகராட்சி சார்பாக முன்னமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தேவையின் அடிப்படையில் மருத்துவ முகாம்கள் நடைபெறும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வரவிருக்கும் பருவமழையை முன்னிட்டு பொதுமக்களோடு இணைந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், மாமன்ற உறுப்பினர்களும் இருக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக 6 செ.மீ அளவிற்கு மழை பதிவாகியுள்ளது. அதற்காகவே துணை முதலமைச்சர் அவர்கள் நேரடியாக ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று காலை மாநகராட்சி சார்பாக உணவு வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், மதிய உணவாக 2 லட்சத்து 30 ஆயிரம் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மழை இல்லை என்பதற்கான மாநில ஆய்வு மையத்தின் தகவலின் அடிப்படையில், வரும் 25ஆம் தேதி மீண்டும் மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சிறப்பான ஏற்பாடுகள் என்னென்ன செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் பதில்:

சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு பகுதியில் 215 இடங்கள் தாழ்வான பகுதி (Low Line Area) ஏரியா என கண்டறியப்பட்டுள்ளன.

இதில் 150 பகுதிகளில் 100 ஹெச்பி திறன் கொண்ட மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர் பெருமக்களும் அந்தந்த பகுதிகளை ஆய்வு செய்து, மழை அதிகரிக்கும் சூழலில் பொதுமக்களை அருகிலுள்ள திருமண மண்டபங்கள் அல்லது மாநகராட்சிக் குட்பட்ட பள்ளிக்கூடங் களுக்கு இடமாற்றம் செய்ய முன்பாகவே அறிவித்துள்ளனர். மழை அதிகம் பெய்யும் சூழலில் மாற்று இடத்துக்கு பொதுமக்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கார்பேஜ் கிளீனிங் சரிவர இயங்கவில்லை என்பது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் அவர்கள் பதில்:

அமைச்சர் அவர்கள், ஆய்வுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்ததாவது, அதிகமாக மார்க்கெட் இயங்கும் பகுதிகள் – பிராட்வே பஸ் ஸ்டாண்ட், பூக்கடை, சௌகார்பேட்டை ஆகிய பகுதிகளில் கூடுதலாக குழு அமைத்து, மழை நாட்களில் 10 நபர்கள் நியமிக்கப் பட்டு இந்த பணிகள் மேற்கொள்ளப்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

புனித தோமையர் மலை முன்னாள் ஒன்றியச் செயலாளர்

மேடவாக்கம் ப.ரவி மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.24-

புனித தோமையார் மலை ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர் மேடவாக்கம் ப.ரவி மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

புனித தோமையர் மலை முன்னாள் தி.மு.க. ஒன்றிய செயலாளரும், சித்தாலப்பாக்கம் ஒன்றியக் குழு உறுப்பினரும், தி.மு.க. தலைமை ஒன்றிய பொதுக் குழு உறுப்பினரும், மேடவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான, மேடவாக்கம் ப.ரவி மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் துயருறுகிறேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் விளாத்திகுளம் வட்டம், சித்தவநாயக்கன்பட்டி கிராமம் அருகே நீர்வழி பாதையை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், ஆற்றங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீத்தாராமன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தி.மு.க. விவசாயத்திற்கு தந்த திட்டங்களின் வரலாறுகள் தெரியாமல்

எடப்பாடி பழனிசாமி நீலிக்கண்ணீர் வடித்து சென்றிருக்கிறார்!

கழக ஆட்சியில் இந்த ஆண்டும் மேட்டூர் அணை சரியான நேரத்தில் திறக்கப்பட்டு, விவசாய தூர்வாரும் பணிகள் முறையாக நடைபெற்றபோதும் அதைகண்ட விரக்தியில் , டெல்டா மாவட்டத்தின் கடை மடைப்பகுதிக்கு தண்ணீர் வரவில்லை விவசாயம் பொய்த்து போய்விட்டது என்கிற ரீதியில் ஒரு அறிக்கையை ஏற்கனவே எடப்பாடி பழனிசாமி டெல்டா மாவட்ட சுற்றுப்பயணத்தின்போது சொல்லி இருந்தார்.

ஆனால் கடைமடை வரை காவிரி நீர் பாய்ந்து, திராவிட மடல் அரசின் முறையான விவசாய செயல்பாடுகளால் சென்ற ஆண்டிவிட பலமடங்கு நெல் அதிகம் விளைந்து விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருந்தது .

அதனால் அதே விரக்தியில் இம்முறை , டெல்டா மாவட்டங்களில் விவசாய சுற்றுப்பயணம் என்கிற பெயரில் குறிப்பிட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தேடிப்பிடித்து அதை பார்வையிட்ட எடப்பாடி பழனிசாமி அவர்கள் , நெல் மூட்டைகள் தேங்கி கிடப்பதாகவும், அதனால் விவசாயிகள் அழுவதாகவும் தனது ஆட்சிகாலத்தில் நெல் மூட்டைகள் முளைத்து நடவுக்கு தயாரான நாற்றுகளாய் வளர்ந்ததையும் , கஜாபுயலால் இதே டெல்டா மக்கள் பாதிக்கப்பட்டு கதறியபோது நேரடியாக வந்து ஆறுதல் சொல்லாத உணமைகளையும் மறைத்து நீலிக் கண்ணீர் விட்டு சென்றிருக்கிறார்.

ஒரு பெண் தங்களது நெல்லை கொள்முதல் செய்யாததை சொல்லி அழுததாக சொல்லும் பழனிசாமி அவர்கள், தங்களது ஆட்சிகாலத்தில் விவசாய வேதனைகளால் டெல்டா பகுதிகளில் தற்கொலை செய்துகொண்ட 40ம் மேற்பட்ட குடும்பங்களின் ஒட்டுமொத்த கதறலையும் மறந்துவிட்டு பேசியதுதான் கொடுமை !

எடப்பாடி பழனிச்சாமியின் இந்த சந்தர்ப்பவாத தேர்தல் ஆதாய பயணம் குறித்து விவசாயி களிடமும் விவசாய சங்க பிரதிநிதிகளிடமும் பேசியபோது அவர்கள் கூறிய கருத்துக்களின் தொகுப்பு.

க.அன்பழகன் ,குன்னலூர் , மாவட்ட விவசாய தொழிலாளர் அமைப்பு

"ஏதோ விவசாயத்தில் தனக்கு அக்கரை உள்ளது போல பேசி இருக்கும் பழனிச்சாமி , தமிழ்நாட்டு மக்கள் முதல் 2010 - 2020 வரையில் தமிழ்நாட்டில் அதிலும் குறிப்பாக நடைபெற்ற விவசாயதற்கொலைகள், அதனால் கிராமங்கள் தோறும் கேட்ட அழுகுரல்கள் , விவசாயிகளின் குரல்வளையை நெரிக்க ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட வேளாண் திருத்த சட்ட திருத்தத்தை ஆதரித்தது. வறுமையை கணக்கெடுக்க வந்த அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் லட்சக் கணக்கில் மதிய உணவு செலவு போன்ற விவசாய விரோத நடவடிக்கைகளை வசதியாக எடப்பாடி மறந்துவிட்டு இன்று புதிதாய் அவதாரம் எடுத்தது போல பேசி சென்றிருக்கிறார்.

எந்த ஒரு செய்தியை கொடுப்பதற்கு முன் அதுகுறித்த வரலாற்றை கொஞ்சம் புரட்டிப்பார்க்க வேண்டும், அப்படி விவசாயத்திற்கும் அதிமுகவிற்கும் உள்ள தொடர்பு என்ன?, திமுக விற்கும் விவசாயத்திற்கும் உள்ள தொடர்பு என்ன ? கொஞ்சம் எடப்பாடி அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் .

இன்றைக்கு முன்னாள் முதல்வர் என்கிற அடைமொழியை பெற்றிருக்கும் எடப்பாடி அவர்கள் தான் எப்போது சட்டமன்ற உறுப்பினரானோம், சட்டமன்றத்தில் முதலிலிருந்து இப்போது வரை யாரையெல்லாம் துதிபாடினோம் , பாடிக்கொண்டிருக்கிறோம் ? எப்படி முதல்வரானோம்? என்றும், திமுக என்கிற மாபெரும் இயக்கத்தின் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் எப்போது சட்டமன்ற உறுப்பினரானார்? தனது முதல் உரையிலேயே அவர் எதைப்பற்றி என்ன பேசினார் என்பதை கொஞ்சம் படித்து பார்க்கவேண்டும்.

"1957 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் குளித்தலை சட்டமன்ற உறுப்பினராகி, முதன் முதலில் தனது கன்னிபேச்சிலேயே முன்னெடுத்த விபரம் நங்காவரம் விவசாய பிரச்சனை! அதன்பிறகு 1968 விவசாய நில குத்தகைதாரர் தற்சார்பு சட்டம் , 1969ம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் பண்ணைத்தொழிலாளர் நியாய ஊதிய சட்டம், அதே 1969 ம் ஆண்டில் வரலாற்று சிறப்புமிக்க குத்தகை நில பதிவுச்சட்டம். 1972 ம் ஆண்டு இந்த சட்டம் திருத்தப்பட்டு ஜீன் 30 1971ம் வருடம் வரையிலான குத்தகை நிலுவை மொத்தமாக ரத்து செய்யப்பட்டது. (பெரும் நிலப்பிரபுக்களிடம் குத்தகைக்கு பயிரிடும் நிலத்தில் 5 ஸ்டாண்டேர்டு ஏக்கர் நிலத்தை மொத்தமாகவோ பகுதியாகவோ குத்தகைதாரர் நியாயமான விலைக்கு வாங்கிக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது). அதன்பின்னர் தலைவர் கலைஞர் முதல்வரான எல்லா காலகட்டத்திலும் குத்தகை பாக்கியை ரத்துசெய்து ஆணையிட்டார். இத்தகைய புரட்சிகரமான சட்டங்களால்தான் தமிழநாட்டில் பெரும் நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் தகர்க்கப்பட்டு உழுது பயிரிட்ட எல்லோருமே நில உடமை பெற்று ஏற்றம் கண்டனர்.

1971ம் ஆண்டு நாட்டிலேயே புரட்சிகரமாக குடியிருப்பு அனுபோக தாரர்கள் உரிமை வழங்கள் சட்டத்தை வடிவமாக்கினார். எந்த நேரத்திலும் தாங்கள் வாழும் இடத்திலிருந்து வெளியேற்றப்படலாம் என்ற அச்சத்தில் வாழ்ந்த லட்சோப லட்ச விவசாயக் கூலி தொழிலாளர்கள் குடியிருந்த வீட்டுமனையை அவர்களுக்கே உரிமையாக்கி ஆணையிட்டார்

1971ல்தான் நாட்டிலேயே முதல்முறையாக விவசாய பல்கலைக்கழகம்.1989 ல் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம். 1973 இல் நெல் மற்றும் அரிசி கொள்முதலுடன் தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகம் . 1973 ல் ஆதர விலையுடன் சேர்த்து கூடுதலாக மாநில அரசின் பங்காக ஊக்கத்தொகை நிர்ணயம். விவசாய தொழிலாளர்களுக்கு நல வாரியம். இவ்வாரிய உறுப்பினர்களின் கல்வி திருமண மகப்பேறு ஆகியவற்றிற்கு உதவித்தொகை . மேலும் உறுப்பினர்கள் இயற்கை எய்தினால் ரூபாய் பத்தாயிரமும் , விபத்தில் இறந்தால் ஒருலட்சம் ரூபாயும் உதவியாக வழங்கி உத்தரவு.

அத்துடன் இயற்கை சீற்றத்தால் விவசாயி இறந்தால் கருணை அடிப்படியில் இழப்பீடு தொகை வழங்கிட நாட்டிலேயே முதல்முறையாக சட்டம். 2006 ம் ஆண்டு7000கோடி ரூபாய் விவசாயிகளின் கடனை முழுமையாக தள்ளுபடி. வேளாண்மைக்கு என தனி நிதிநிலை அறிக்கை தந்தது திமுக அரசு.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் கருத்து!

எஸ். அசோகன் திருவலஞ்சுழி , மாவட்ட விவசாயிகள் அமைப்பு

அ.தி.மு.க. ஆட்சியில் விவசாய வேதனைகளால் தற்கொலை செய்திகொண்ட குடும்பங்களை கனிவோடு காத்து நிவரணங்களை வழங்கியது அப்போதைய எதிர்கட்சியாக இருந்த திமுகவும், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும், அதுமட்டுமா "விடியல் பயணம்", "காவேரி மீட்பு பயணம்", டெல்லியில் போராடிய விவசாயிகளுக்கான ஆதரவு, விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் சந்திப்பு என எதிர்கட்சியாக இருந்தும் செய்தவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் .

விவசாயம் என்றாலோ, விவசாய தொழிலாளர்கள் என்றாலோ அதற்கு திமுக தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர்தான் , முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான் என்கிற வரலாறு உண்டு.

காவிரி நீர் முறையாக கிடைப்பதில் பல்வேறு சிக்கல்கள் ஒரு சவாலாக இருப்பினும் அதே மேலாண்மை செய்து விவசாய புரட்சியை 2022முதல் செய்துவருவது திமுக அரசு . அதோடு மட்டுமின்றி எங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வேண்டுமோ அங்கெல்லாம் விவசாயிகள் விருப்பப்படி TNCSC கொள்முதல் நிலையங்கள், அங்கே கான்க்ரீட் உலர் களங்கள் , மழையிலிருந்தும் வெயிலிலிருந்தும் பாதுகாக்கும் தார்பாய்கள், அங்கே பணிபுரியும் சுமைப்பணி யாளர்களுக்கு ஊதிய உயர்வு , நடவு மற்றும் அறுவடை காலங்களில் தேவையான எந்திரங்கள் மானிய விலையில் , அல்லது மானிய வாடகையில் ,குருவைத்தொகுப்பு திட்டம், இடுபொருட்கள் போதுமான அளவு கை இருப்பு, விவசாய உற்பத்தி பொருட்களை பாதுகாக்க நவீன கிடங்குகள். இப்படி பல சலுகைகளை திராவிட மடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்திருக்கிறார்.

வேளாண்மைக்கு தனி பட்ஜெட். விவசாயிகள் பாராட்டும் அந்த பட்ஜெட்டை வெறுப்பு அரசியலில் எடப்பாடி குறி கூறி சென்றிருக்கிறார். திராவிட மடல் ஆட்சியில்தான் சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் நிலத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவுவதற்காக, 7,900 பவர் டில்லர்கள் மற்றும் 6,000 பவர் களை எடுக்கும் இயந்திரங்கள், 2025-26 ஆம் ஆண்டில் 215.80 கோடி செலவில் விவசாய இயந்திரமயமாக்கல் திட்டம் , இதன்மூலம் 17,000 விவசாயிகளுக்கு பலன் . டிராக்டர்கள் மற்றும் டிராக்டரில் இயக்கப்படும் கருவிகள் உட்பட மொத்தம் 603 விவசாய இயந்திரங்கள், இ-வாடகை மொபைல் செயலி மூலம் குறைந்த கட்டணத்தில் வாங்கப்பட்டு வாடகைக்கு . இந்த முயற்சிக்காக 17.37 கோடிநிதி .

இப்படி விவசாய செழிப்பு என்றாலோ, வேளாண்மை செழிப்பு என்றாலோ அது திமுகஅரசு காலம்தான் என்கிற நிலையை மறந்து, பச்சை துண்டை தோளில் போட்டதால் மட்டுமே தானும் விவசாயி ஆகிவிட்டோம் என்கிற கனவில் பேசி சென்றிருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.

ஜீவா , விக்கிரபாண்டியம், மாவட்ட விவசாய தொழிலாளர் அமைப்பு

இந்த 2025-26ம் ஆண்டை பொறுத்தவரை திருவாரூர் மண்டலத்தில், நடப்பு காரீ 2025-26 குறுவை பருவத்தில் சுமார் 77,573 ஹெக்டேர் நெல் பயிரிடப்பட்டு, இதன்மூலம் சுமார் 2,90,000 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்படலாம் என உத்தேசமாக மாவட்ட நிர்வாகத்தால் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த குறுவை பருவத்திற்கு 173 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 93,986 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

திருவாரூர் மண்டலத்தில் நடப்பு காரீப் 2025-2026 குறுவை பருவத்தில் 378 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 12.10.2025 வரை 1,49,013 மெ.டன்கள் கொள்முதல் செய்யப்பட்டு சுமார் 81,571 மெ.டன்கள் இயக்கம் செய்யப்பட்டுள்ளது.

கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிற்கான தொகை சுமார் ரூ.340 கோடி வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு 28,862 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இரண்டு மடங்க அளவிற்கு கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது.

தொகுப்பு : ப.ஜாகீர் உசேன்
திருவாரூர்

திருவாரூர் மாவட்ட நிர்வாகத்தால் நெல்கொள்முதல் செய்வதற்கும், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மணிகளை இயக்கம் செய்வதற்கும் , இதுவரை சுமார் 51,000 ஹெக்டேர் அறுவடை பணி நிறைவு பெற்று மீதமுள்ள சுமார் 26,500 ஹெக்டேர் அறுவடை பணி நடைபெற வேண்டியுள்ள நெல் மணிகளை கொள்முதல் செய்ய ஏதுவாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தகுந்த முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நலன்கருதி, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தினசரி 1000 மூட்டைகள் கொள்முதல் செய்யவும், இரவு 8 மணி வரை கொள்முதல் பணியினை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இயக்க பணியினை துரிதமாக மேற்கொள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் விழிப்புபணி அலுவலர் மற்றும் 5 மண்டல மேலாளர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு தினசரி இயக்கம் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகிறது.

அயல் மண்டலங்களிலிருந்து இம்மண்டலத்திற்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ள கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அலுவலர்களை அனைத்து நெல் இறங்கும் இடங்களிலும் பணிய மர்த்தப்பட்டு இயக்கப்பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர் மண்டலத்தில் நெல் இறங்கும் இடங்களில் நிரந்தரமாக 428 சுமை தூக்கும் பணியாளர்களும், மேலும் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் இருந்து தற்காலிகமாக 200 சுமைதூக்கும் பணியாளர்களும், ஆக கூடுதலாக 628 சுமைதூக்கும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அயல் மண்டலங்களான கிருஷ்ணகிரி, சிவகங்கை மற்றும் பெரம்பலூர் மண்டலங்களிலிருந்து 50 சுமைதூக்கும் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

வட்டம் வாரியாக வருவாய்த்துறை மூலம் நெல்கொள்முதல் நிலையங்கள், அனைத்து நெல் இறங்கும் இடங்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.தேவைக்கேற்ப புதிய நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு வருகிறது.

திறந்தவெளி நெல் சேமிப்பு நிலையங்களை முடிகொண்டான், வண்டாம்பாளை, தெற்குநத்தம், இடையர்நத்தம், கீழஅமராவதி மற்றும் ஆதனூர் ஆகிய இடங்களில் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப மேலும் அமைக்கப் படும். வெளிமாவட்டத்திற்கு சுமார் 60,000 மெ.டன் நெல் அனுப்புவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் தற்போது கொள்முதல் பணி மற்றும் இயக்கப்பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அக்டோபர்-2ம் தேதி டெல்டா மாவட்டங்களின், மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆலோசனை செய்து, விவசாயிகளால் உற்பத்தி செய்யக்கூடிய நெல்மணிகளை எந்தவித சேதாரமுமின்றி கொள்முதல் செய்வது முதல், உலைக்கு செல்லும் வரை பாதுகாப்பாக சேர்க்க வேண்டும் என ஆணையிடப்பட்டதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதலை விரைவுப்படுத்துவதற்காக வட்டம் வாரியாக 12 மண்டல மேலாளர்கள்; நியமிக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிவருகிறார்கள்.

மேலும், கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக இல்லாத அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டில் நெல் விளைச்சல் ஏற்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமான செய்தி. தமிழ்நாட்டில் நம்முடைய டெல்டா மாவட்டம் மட்டுமல்லாமல் அனைத்து மாவட்டங்களிலும் நெல் பரப்பு அதிகமாகியுள்ளது. அதன்காரணமாக உற்பத்தியும் அதிகமாகியுள்ளது. ஒவ்வொரு ஹெக்டரிலும், ஏறக்குறைய ஆறு டன் அளவிற்கு நெல் விளைந்து கொண்டிருக்கிறது. எதிர்க்காலத்தில் நெல் விளைவிக்ககூடிய மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக அமையும்.

தற்சமயம் திருவாரூர் மாவட்டத்தில், உற்பத்தியாகியுள்ள நெல்மணிகளை பாதுகாப்பாக வைப்பதற்காக ஏற்கனவே கூடுதல் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளது. அந்த இடங்களின் பற்றாக்குறையினால், புதியதாக மூன்று கேப் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் 8000 டன் அளவிற்கு நெல் வெளி மாவட்டங்களுக்கு செல்வதற்காக ரயில் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலமாக கொள்முதல் நிலையங்களில் நெல் தேங்கமால் பாதுகாப்பாக சேர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகிறது .

தமிழ்நாட்டில் நாளது தேதிவரை 1728 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நாளது தேதி வரை 7.02 லட்சம் மெ.டன்னுக்கும் அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டு 97125 விவசாயிகளுக்கும் மேல் பயனடைந்துள்ளனர். மேலும் விவசாயிகளுக்கு ரூ.1606.65 கோடி பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

க.பா.ஜானகி ராமன் ,கொருக்கை ,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ம